**<u>சுருக்கம்</u>**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை – துறை கட்டமைப்பு மற்றும் பணியாளர்கள் தொடர்பான நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>பொது (சிறப்பு ஆ)த் துறை</u>

அரசாணை (வாலாயம்) எண்.2014

நாள்:12.05.2021
பிலவ, சித்திரை –29
திருவள்ளுவர் ஆண்டு – 2052.

**படிக்க**

1. அரசாணை (நிலை) எண். 269, பொது (சிறப்பு அ)த் துறை நாள்: 07.05.2021.
2. சிறப்பு அலுவலர், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை குறிப்பு, நாள்: 08.05.2021.

*****

**<u>ஆணை:</u>**

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் ‘‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’’ என்ற புதிய துறை தலைமைச்செயலகத்தில் உருவாக்கப்பட்டு துறைக்கு சிறப்பு அலுவலரை நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. ‘‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’’ துறையின் சிறப்பு அலுவலர் பார்வை 2ல் மேற்படி துறையில் மேற்கொள்ளப்படும் பணிகளை குறித்த காலத்தில் செய்து முடிக்க பணியாளர்கள் மற்றும் சில கட்டமைப்புகளை ஏற்படுத்தித்தர அரசின் ஆணை வேண்டியுள்ளார்.

3. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலர் கோரியதை அரசு நன்கு பரிசீலித்து பின்வருமாறு ஆணையிடுகிறது:–

அ. **<u>பணியாளர்கள்:</u>** முதலமைச்சர் தனிப்பிரிவில் இயங்கி வரும் பிரிவுகளில் ஒரு பிரிவை (பிரிவு அலுவலர், உதவி பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள், தட்டச்சர்கள்) உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையோடு இணைந்து பணியாற்ற பணிக்கப்படுகிறது. தனிச்செயலாளர்கள், நேர்முக உதவியாளர், பதிவுரு எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர்கள் பொது நிர்வாக துறையின் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

ஆ. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தேர்தல் பரப்புரையில் “உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’’ என்ற நிகழ்வின் மூலம் பெறப்பட்ட மனுக்கள் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் பரிசீலிக்க ஏதுவாக, தமிழ்நாடு அரசு மின் ஆளுமை முகமையில் (TN-ega) இயங்கிவரும் முதலமைச்சரின் உதவி மைய குழுவினை (CM-Helpline) பயன்படுத்திக்கொண்டு அனைத்து மனுக்களையும் பதிவேற்றம் செய்து உரிய நடவடிக்கை எடுக்க பணிக்கப்படுகிறது. அதற்கான நிதி ஆதாரம் தமிழ்நாடு அரசு மின் ஆளுமை முகமையின் கருத்துரு தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறைக்கு சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவும் பணிக்கப்படுகிறது.

இ. மேற்படி பெறப்பட்ட மனுக்களின் மீதான நடவடிக்கை / தீர்வு முதலமைச்சரின் தனிப்பிரிவு கண்காணிக்க பணிக்கப்படுகிறது.

த.பி.பா.

ஈ. அனைத்து அரசு துறை தலைமை அலுவலகங்களிலும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை மூலம் பெறப்படும் மனுக்களின் மீது எடுக்கப்படும் நடவடிக்கை / தீர்வு குறித்து கண்காணித்திட ஒரு தொடர்பு அலுவலரை (Nodal Officer) கூடுதல் பொறுப்பில் நியமனம் செய்திட ஆணையிடப்படுகிறது.

உ. அனைத்து மாவட்டத்தில் உள்ள சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இயங்கும் அலுவலரைக்கொண்டு தனிப்பிரிவை ஏற்படுத்தி மனுக்களின் மீதான நடவடிக்கையினை கண்காணித்திட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்திரவிடப்படுகிறது.

4. இவ்வரசாணை தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் நிதித்துறையின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு
அரசு தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
சிறப்பு அலுவலர், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை,
தலைமைச்செயலகம், சென்னை –9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு),
தகவல் தொழில்நுட்பத்துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை,
தலைமைச்செயலகம், சென்னை – 9.
ஆணையர், தமிழ்நாடு அரசு மின் ஆளுமை முகமை, சென்னை.
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை – 9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை – 9
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 9

<u>நகல்</u>
முதலமைச்சரின் செயலாளர், தலைமைச்செயலகம், சென்னை – 9
தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, தலைமைச்செயலகம், சென்னை –9.
தலைமைச் செயலரின் தனிச்செயலாளர், சென்னை – 9.
பொதுத்துறை செயலரின் தனிச்செயலாளர், சென்னை – 9.
பொது (சிறப்பு–அ/கடும் மந்தனம்) துறை, சென்னை – 9
தகவல் தொழில்நுட்பத்துறை / நிதித்துறை, சென்னை – 9.
உதிரிகள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பா.ரா. அம்பலவாணன்
அரசு கூடுதல் செயலாளர்